# *மிளகாய் வற்றலின் விலை விவசாயிகளை மகிழ்விக்கும்*

*இந்தியாவில், வாசனை மற்றும் நறுமணப் பயிர்களின் மொத்தப் பரப்பளவில், மிளகாய் வற்றல் சுமார் 26 சதவீதம் பங்களிக்கின்றது. தேசிய தோட்டக்கலை வாரியம் 2017-18 ஆம் ஆண்டின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, மிளகாய் வற்றல் 8.44 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 21.06 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக அறியப்படுகிறது. ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், கர்நாடகா, ஒடிசா, குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவை மிளகாய் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். இம்மாநிலங்கள் இணைந்து மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில் 89 சதவீதம் பங்களிக்கின்றன. மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில் ஆந்திர பிரதேசம் மட்டுமே 53 சதவீதம் பங்களிக்கின்றது.*

*இந்தியாவின் மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில் 75 சதவீதம் நம் நாட்டிலேயே உபயோகப்படுத்தப்படுகிறது. மிளகாயின் ஆக்ஸிஜனேற்ற மற்றும் மருத்துவ குணங்கள் காரணமாக ஊட்டச் சத்து மருந்து தொழிற்சாலைகளில் மிளகாய்க்கு எப்போதும் அதிக தேவைகள் உள்ளன. சீனா, இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து அதிக ஏற்றுமதி தேவைகள் இருந்து வருவதாலும், வர்த்தகர்களின் அதிக கொள்முதல் நோக்கத்தாலும், ஆந்திர பிரதேசத்தில் வைரஸ் நோய் தாக்கத்தால் உற்பத்தி குறைந்துள்ளதாலும், மிளகாய் பயிர் உற்பத்தி செய்யும் சில பகுதிகளில் மக்காச் சோளம் பயிரிடப்பட்டதாலும் மற்றும் முன்பேர சந்தையில் மிளகாய் வர்த்தகத்திற்கான தற்காலிக தடை ஆகியவற்றாலும் வரும் மாதங்களில் மிளகாய் வற்றல் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.*

*தமிழ்நாட்டில், அக்டோபர்-நவம்பர் மாதங்களில் மிளகாய் பயிரிடப்படுகின்றது. சம்பா, தேஜா மற்றும் முண்டு (புல்லட்) வகை இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிளகாய் அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. உள்ளூர் வரத்து ஏப்ரல் முதல் வாரத்தில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. விருதுநகர், இராமநாதபுரம், பரமகுடி, கமுதி மற்றும் விளாத்திகுளம் ஆகிய 35 கி.மீ சுற்றளவு பகுதியிலிருந்து சந்தைக்கு மிளகாய் வரத்து உள்ளது.*

*இச்சூழலில், விவசாயிகள் அறுவடை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் - விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 19 ஆண்டுகளாக*

*இராமநாதபுரம் சந்தையில் நிலவிய மிளகாய் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான (சம்பா) மிளகாய் வற்றலில் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 110/- முதல் ரூ.120/- வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் ஜுலை வரை வரும் மிளகாய் வற்றலின் வரத்தைப் பொருத்து விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.*

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*அ.) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி -0422-2431405*

*ஆ)இயக்குனர் மற்றும் முனை அதிகாரி*
*தமிழ்நாடு பாசன விவசாய நவீனமாயமாக்கல் திட்டம்*
*நீர் தொழிட்நுட்ப மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி -0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*வாசனை மற்றும் தோட்டக்கலை பயிர்கள்*
*தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்*
*கோயம்புத்தூர்-641 003*

தொலைபேசி - *0422 -6611284*

**Red Chillies Prices will Cheer Farmers**

Red chilli is the major spice crop occupying nearly 26 per cent of total area under spices in India. According to First Advance Estimates of National Horticultural Board (2021-22), the area under red chilli is 7.28 lakhs hectare with a production of 20.92 lakhs tonnes. Major chilli growing states are Andhra Pradesh, Telangana, Madhya Pradesh, West Bengal, Karnataka, Odisha, Gujarat and Tamil Nadu contribute nearly 89 per cent of total production under chillies. Andhra Pradesh alone accounts for 53 per cent of total chilli production in the country.

Nearly 75 per cent of total chillies production is consumed within the country. There is always high demand for chillies in nutraceutical industries because of its antioxidant and medicinal properties. Export orders for high quality chillies are emerging from China, Sri Lanka and Malaysia. Further, trader /stockists buying spree attitude, low output in Andhra Pradesh due to viral disease, crop diversification to maize in some of the chilli growing areas, suspension of trading in chillies in the futures platform would firm up chilli prices in coming months.

In Tamil Nadu, chilli is grown during October – November. Sannam, Teja and Mundu (Bullet) are the major types of chillies grown in Tamil Nadu. Ramnad, Sivaganga, Thoothukudi, Virudhunagar and Thirunelveli are the major districts cultivating chillies and the crop area is below normal. It is expected that local arrivals will commence by first month of April. Chilli arrivals has started coming from the 35Km radius area of Virudhunagar, Ramnad, Paramakudi, Kamuthi, Vilathikulam.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University

analyzed the past 19 years prices that prevailed in Ramanathapuram Regulated Market for sannam chillies. As per the analysis and market survey, the farm gate price of good quality chillies will be Rs.110-120 per kg. From April to July, increase in arrivals may decrease the price of chillies. Hence, farmers are advised to take up appropriate marketing decision.

***For further details contact:***

*i).Domestic and Export Market Intelligence Cell*

*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*ii).The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Spices & Plantation Crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-6611284*